பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 07 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- நாட்டைக் கட்டமைப்பதற்கான நடவடிக்கைகளில் மருந்து உற்பத்தி துறை முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.
- குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாதவாறு அனைத்து துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.
- மேகதாது விவகாரம் தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாநில அரசுக்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Anahat Singh சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

நாட்டைக் கட்டமைப்பதற்கான நடவடிக்கைகளில் மருந்து உற்பத்தி துறை முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புதுமைக் கண்டுபிடிப்புகள், வேலைவாய்ப்பு உருவாக்கம், குறைந்த செலவில் சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வது போன்ற நடவடிக்கைகள் மருந்து உற்பத்தியில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக உருவெடுக்கச் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி, பொதுப் பெயரிலான மருந்து உற்பத்தி மற்றும் வினியோகத்தில் இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாக உருவெடுத்து வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள், நூற்றுக்கணக்கான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மருந்து உற்பத்தி துறையில் உலகின் நம்பகத்தன்மை கொண்ட நாடாக இந்தியாவை நிலைநிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக புதுதில்லியில் மருந்து உற்பத்தி தொடர்பான மாநாட்டை திரு. ஜெ.பி. நட்டா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாதவாறு அனைத்து துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.

திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மக்களுக்கு தடையின்றி பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆழ்துளை கிணறுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் பயன்பாட்டைக் கண்காணிக்க வேண்டும் என்றும், பழுதடைந்த குடிநீர் குழாய்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மேகதாது விவகாரம் தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாநில அரசுக்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்டா மாவட்ட விவசாய சங்கப் பிரதிநிகளின் கருத்துகளை கேட்டறிந்து அதன் அடிப்படையில் சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து உரிய முடிவை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கர்நாடக அணைகளில் போதிய அளவு தண்ணீர் இருந்தும், காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுப்புது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது என்று திரு. எடப்பாடி பழகுறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

காவிரி விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை பிஜேபி மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி நீரை உரிய நேரத்தில் வழங்காத கர்நாடக மாநில அரசின் செயல்பாடுகள் கண்டனத்திற்கு உரியது என்று கூறியுள்ளார்.

காவிரியில் தமிழகத்திற்கு உரிய தண்ணீரை திறந்துவிட வலியுறுத்தி தஞ்சையில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி பிஜேபி சார்பில் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள், பருவமழை காலத்திற்கு முன்னதாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னையில் கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், ஒக்கியம் மடுவு போன்ற வடிகால்களும், வேளச்சேரி, புழல், நாராயணபுரம், ஆதம்பாக்கம், கோவிலம்பாக்கம் ஏரிகளும் முட்டுக்காடு போன்ற முகத்துவாரங்களும் தூர்வாரி பராமரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரு நிறுவனங்கள், தன்னார்வலர்களின் பங்கேற்புடன் நீர்நிலைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அந்தச் செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் உள்ள ஒன்றாம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மரம் வளர்த்தல் குறித்த நிகழ்ச்சி வாரம்தோறும் திங்கட்கிழமைகளில் நடத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டியுள்ள மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், இரண்டு நாட்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகக் கடலோர பகுதிகளில் நிலவி வரும் வளிமண்டல சுழற்சி காரணமாக, அடுத்த ஐந்து தினங்களுக்கு தமிழகத்தில் பரவலாக லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

வேலூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில், ஒருசிலப் பகுதிகளில், வெப்பநிலை இயல்பைக் காட்டிலும் இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் இன்று மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஸ்பெயினில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ காரணமாக, அவசரநிலை பிறப்பிக்கப்படுவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் கவலை அளிப்பதாக உள்ளது என்று மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சீனாவின் Guangdong நகரில் வீசிய Noul சூறாவளி காரணமாக அப்பகுதியில் வசிக்கும் 3 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

தில்லியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் இதுவரை 66 லட்சம் பேர் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கைலாஷ், மானசரோவர் புனித யாத்திரையை நிறைவு செய்த யாத்ரீகர்களின் 5வது குழு, நாதுலா பாதை வழியாக சிக்கிம் மாநிலம் கேங்டாக் வந்தடைந்துள்ளனர்.

<<<<>>>>

ஒடிசா மாநிலம் பூரி ஜெகன்நாதர் ஆலயத்தில் பிரசித்தி பெற்ற தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் சிங்கப்பெண் அதிரடிப்படை சார்பில் பெண்கள் மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<>>>>

நாமக்கல் மாவட்ட மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு நாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் முகாமை ஆட்சியர் திரு. மதுபாலன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மரம் வளர்த்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி பிரியா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னையை அடுத்த ஆவடியில் மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கான அரசு சேவைகள் நலத்திட்ட முகாம் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Anahat Singh சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

கனடாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-3, 11-7, 11-9 என்ற செட் கணக்கில், எகிப்தின் Ruqayya Salem-ஐ வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

இது அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 90 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் ஆடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 219 ரன் எடுத்தது.

220 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஜிம்பாப்வே அணி, 17.5 ஓவரில் 129 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று இந்தியா தொடரைக் கைப்பற்றியுள்ளது.

**<<<<>>>>**